REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

திமுக தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## மிரட்டும் படலம் ஆரம்பம்!

சென்னை, ஆக. 5—

அரசாங்க ஊழியர்கள் தங்களின் குறைகளைக் களைந்தெறியவும், இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை அகற்றிக்கொள்ளவும் அரசியல் கட்சிகளை துணைக்கு அழைப்பது அரசாங்கத்திற்கு விரோதமான செயலாம்!

அரசாங்கம், அத்தகைய அரசாங்க ஊழியர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று பயமுறுத்தத் துவங்கியுள்ளது!

அரசாங்க ஊழியர்களின் ஒழுங்கு விதிகளில் இதற்கான திருத்தம் செய்யப்பட்டுள்ளதாம்!

மலர் 5] சென்னை: ஆடி 21உ திங்கள் (5—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 22உ செவ்வாய் (6—8—57) [இதழ் 43

# உருண்டோட வேண்டிய பணம் ஓரிடத்தில் குவிய அனுமதிப்பானேன்?

## கூலி உயர்வு கேட்டால் குண்டுகளா பரிசு?

## ஊருக்கு வாழ்வுதர ஒருவர் சாவதால் நஷ்டமில்லையே!

### சென்னையில் அண்ணா பேருரை

"டில்லிப் பட்டணத்திலே 2,000 தெருக்கூட்டும் தொழிலாளர்கள், 'சம்பளம் போதவில்லை' என்று கிளர்ச்சி செய்தார்கள். பாராளுமன்றம் கூடியிருக்கும் வேளையில் பாராளுமன்றத்தின் காதுகளிலும் விழ வேண்டுமென்று 200 தொழிலாளர்கள் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் நின்று கிளர்ச்சி செய்தார்கள். தெருக்கூட்டும் கோல் தவிர அவர்களிடம் வேறு ஆயுதம் கிடையாது; கிளர்ச்சி நேரத்தில் அதையும்கூட அவர்கள் எடுத்துச் செல்லாமல் வெறும் கையோடுதான் இருந்தனர். வேலைநிறுத்தம் செய்ததால் கூட்டுக்கோல் அவர்கள் கைகளில் இல்லை. வெறுங் கையுடன் பார்லிமெண்டு நோக்கிச்சென்ற அவர்களை சமாதான முறையில் திருப்பி அனுப்பியிருக்க முடியாதா, நேரு சர்க்கார்?

"ஜிம்கானா மைதானத்தில் இலட்சக்கணக்கான மக்களைச் சந்திக்கும்போது வருகிற சந்தோஷம் 2,000 கூட்டுந் தொழிலாளரை சந்திக்கிறபோது ஏற்படவில்லை அவருக்கு! தியாகத் தொழிலான கூட்டும் தொழிலைச் செய்யும் அந்தப் பாட்டாளிகளைப் பார்த்து நேரு மாடிமீது வந்து நின்றுகொண்டு ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அவர்கள் திரும்பிப் போயிருக்க மாட்டார்களா? அவர்கள் எதற்குக் கிளர்ச்சி செய்தனர்? 'கூலி போதவில்லை' என்றனர். இதற்குத் துப்பாக்கிக் குண்டுதான் பரிசா? அந்த ஏழைத் தொழிலாளி மக்கள் மீது போலீசார் துப்பாக்கியால் சுட்டனர். ஒருவர் செத்தார்; மற்றொருவர் சாகுந்தருவாயிலிருக்கிறார்; இன்னும் சிலர் காயம்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

"இப்படிப்பட்ட பயங்கரச் சூழ்நிலையைக் குறித்து நாம் பயப்படத் தேவையில்லை. ஒருவர் செத்து, அதனால் ஓராயிரம் பேர் வாழ முடியுமென்றால், அதனால் நஷ்டமொன்றுமில்லை. அண்மையில் தேவதாஸ் காந்தி செத்தார். அவர் மகாத்மாவின் பிள்ளை; மாடியில் பிறந்தவர்; சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரின் மருமகன்; எனவே, எப்பேர்ப்பட்டவரானாலும் சாவு வருவது உறுதி.

"சாவு ஒரு முறைதான் ஒருவருக்கு வரும்; அப்படிச் சாவது பயனுள்ள காரியத்திற்கு உதவுமானால் அந்தச் சாவு குறித்து வருந்தத் தேவையில்லை. ஒருவன் ஊருக்காகச் செத்தான் என்றால், தான் செத்து பிறரைப் பிழைக்க வைக்கிறான் என்று பொருள்! நாடாளும் சர்க்காரின் நாடியைப் பார்த்துச் சொல்லுகிறேன் இதை!

"டால்மியாபுரம் என்ற பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றச்சொன்னோம்; இப்படி மாற்றுவதில் என்ன சிரமம் இருக்கிறது? தார் கொண்டு அழித்து எழுத ஆறணா செலவுதான் அதற்குப் பிடிக்கும். இதற்காக மூன்று பேர் செத்தார்கள்; ஒருவருக்குக் கை போயிற்று; இன்னும் பலர் காயமுற்றனர் என்பது நினைவிருக்கட்டும்."

—இவ்வாறு அண்ணா அவர்கள், 3—7—57-ல் நடைபெற்ற சென்னை 27-வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"இந்தக் காங்கிரஸ் ஆட்சியில், தபால்-தந்தி ஊழியர் வேலை நிறுத்தம் முதல் கிளர்ச்சியல்ல; மாதம் ஒரு கிளர்ச்சி நடந்தவண்ணமுள்ளது. இரண்டு மாதத்துக்கு முன்பு கிராம அதிகாரிகள் கிளர்ச்சி நடத்தினர்! அதற்கு முன்பு ஆரம்ப ஆசிரியர்கள் கிளர்ச்சி! தேர்தலுக்கு முன்பு என். ஜி. ஓ.-க்கள் கிளர்ச்சி! அதற்கு முன்பு இரயில்வே ஊழியர்கள், தாங்கள் கசக்கிப் பிழியப்படுவதை நாட்டிற்கு எடுத்துக்காட்டினர்! அதற்கு முன்பு நடுத்தர மக்கள், விலையேற்றத்தைத் தடுக்க கிளர்ச்சி செய்ய நேர்ந்தது! அதற்கு முன்பு விற்பனை வரி எதிர்ப்புக் கிளர்ச்சியை வியாபாரிகள் செய்தனர்! அண்மையில் வரி அதிகரிப்பை எதிர்த்து கூக்குரல் எழுந்தது.

"இப்படித் தொடர்ந்து கிளர்ச்சி நடப்பதற்கு யார் காரணம்? கிளர்ச்சி செய்வோர் மீது தவறு கிடையாது; சர்க்கார் மீது தான் தவறு!

"வீட்டில் ஒருவருக்குக் 'காய்ச்சல் வந்தால், 'ஏதோ ஒத்துக் கொள்ளாத பண்டத்தை உட்கொண்டார்; அதனால் காய்ச்சல் வந்தது' என்று சொல்லலாம். ஒரேநேரத்தில் பலருக்குக் காய்ச்சல்—ஒரே வீட்டில் அண்ணனுக்குக் காய்ச்சல்; தம்பிக்குக் காய்ச்சல்; தாயார், தமக்கை அனைவருக்கும் காய்ச்சல்; மருந்து வாங்கிவர ஆள் இல்லை என்றால், என்ன அர்த்தம்? தவறு எங்கே இருக்கிறது என்பதை அறிய வேண்டும். அதேபோலத்தான் கிளர்ச்சி நடத்துவோர்மீது குற்றமில்லை; சர்க்கார் போக்கிலேதான் தவறு இருக்கிறது.

"அடக்குமுறையை வீச நினைக்கும் ஆளவந்தார் சொல்கின்றனர்—'உணர்ச்சியைத் தூண்டி, கிளர்ச்சி செய்ய யாரோ ஏவி விடுகிறார்கள்'—என்று! கிளர்ச்சியைக் கிளப்பிவிடுவதென்றால் தி. மு. கழகத்தினரால் முடியாது; தி. மு. கழகத்திடம் பத்திரிகை பலம் இல்லை; வீணான கிளர்ச்சிகளைக் கிளப்பிவிட வசதியில்லை. 'யாரோ தூண்டிவிடுகிறார்கள்' என்ற எண்ணம் இருக்கும்வரை, கிளர்ச்சிக்கான காரணத்தைக் கண்டறியமுடியாது.

"நான் பள்ளியில் படிக்கும் சிறுவனாக இருந்த காலத்தில் ஒரு வீட்டிலே கற்கள் வந்துவிழும்; தினந்தோறும் இப்படி கல் விழுந்து வந்தது. யாரோ ஏவல் செய்ததனாலேயே கல் விழுவதாக எல்லோரும் கூறினர். 'ஏவல்' என்றால், கண்ணுக்குத் தெரியாத உருவமுள்ள பிசாசை அழைத்து கொஞ்சம் மந்திரம் ஓதி, கல் போடச் செய்வதாம்! பிசாசு எப்படிக் கல்போட்டது என்பதை அறிய நான் மாந்திரீகனல்ல; பிசாசுக்கு நண்பனுமல்ல! பிசாசு ஓட்டும் காரியத்துக்கான பணமெல்லாம் செலவிட்டு, முயற்சிகளெல்லாம் செய்தபின் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைச்சொன்னார்கள்; அது கள்ளுக்கடை இருந்த காலம்; மாமேறும் தொழிலாளர்களைக் கூப்பிட்டார் சப்-இன்ஸ்பெக்டர்; 'இரவு 8 மணிக்கு கையில் டார்ச் லைட்டுடன் தென்னை மரங்களின் மீது ஏறிப் பாருங்கள்' என்று சொன்னார்; அப்பொழுது உண்மை வெளியாயிற்று; ஒரு வீட்டின் மொட்டை மாடிமீது நின்றுகொண்டு கட்டிளங்காளை ஒருவன் வீசிய கற்கள்தான்—காதல் ஏமாற்றத்தால் வீசிய கற்கள்தான் அவை என்பது புரிந்தது. 'ஏவலை' பற்றியே பேசிக் கொண்டிருந்ததால்தான் கல்விழுவதை நிறுத்த முடியவில்லை; அதற்கான காரணம் கண்டு பிடிக்கப்பட்டபின் தான் கல்விழுவது நின்றது.

"அதேபோல், கிளர்ச்சியை ஏவிவிட்டவரைத் தூற்றிக்கொண்டிருப்பதால், சர்க்கார்மீது சுடுசொற்கள்தான் விழுந்து கொண்டேயிருக்கும்.

"ஏன் கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதை சர்க்கார் அறிய வேண்டும்; 'பாட்டாளிகளின் அடிவயிறு குழைகிறது — அதனால் கிளர்ச்சி எழுகிறது; வயிற்றுப் பசி தீர்ந்தால்தான் கிளர்ச்சிகள் ஓயும்' என்று சர்க்காருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

"நேரு பிடிவாதமாக இருக்கிறார் என்பது மட்டுமல்ல; ஓரளவுக்குப் பிடிவாதத்தினின்றும் இறங்கியிருக்கிறார். தபால் ஊழியர்கள், தாங்கள் கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவித்தபோது நேரு, இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்; 'இவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்; நாம் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு கிடைக்கும் புகழ் மூட்டையைக் கொண்டுவந்து புதுடில்லியில் அவிழ்த்து விட்டால் அதைக் கண்டு அவர்கள் திருப்தியடைந்து விடுவார்கள்' என்று கருதினார் நேரு; ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. டில்லியில் அவர் அவிழ்த்துக் கொட்டிய புகழ்க் குவியல்களைக் கண்டும், தபால்-தந்தி ஊழியர்கள் தங்கள் திட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை. உடனே பண்டிதர், தன் 'சுருதி'யைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டார்; 'உங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்கிறீர்கள்; ஆனால் என் நாட்டம் நோட்டம் அத்தனையும் இரண்டாவது திட்டந்தான்; அதன் பிறகு வேண்டுமானால் கவனிப்போம்' என்றார். அதன் பின், தபால்-தந்தி ஊழியர்களுக்கு முற்போக்குக் கட்சிகளின் பேராதரவு கிடைத்தது. இதனால் அவர்கள் மிக்க வலிவோடு இருக்கிறார்கள் என்பதை உணர்ந்த நேரு 'உங்கள் குறைகள் என்ன? கொண்டு வாருங்கள்' என்றார். பின்னர், 'இப்பொழுது காலம் சரியில்லை; பிறகு கவனிக்கிறேன்' என்றார். அப்பொழுது அவர்களுக்குக் கொஞ்சம் சபலம் தட்டியிருந்தால், கிராம அதிகாரிகளைப் போல ஆகியிருப்பார்கள்; ஆனால் கொஞ்சம் புத்திசாலித்தனமாக அவர்கள் நடந்துகொண்ட காரணத்தால், 'உங்கள் பிரச்சினையைக் கவனிக்க ஒரு குழுவை நியமிக்கிறேன்' என்றார் நேரு; அதற்கும் அவர்கள் திருப்தியடையவில்லை; 'அந்தக் கமிட்டியின் அதிகாரங்கள் என்னென்ன?' என்று கேட்டனர்; அதன் பிறகு, 'சம்பளக் கமிஷன்' என்று வேண்டுமானால் அக்குழுவிற்குப் பெயர் கொடுக்கலாம்' என்று கூறி ஒருபடி இறங்கினார்; 'வெறும் பெயர் மாற்றம் மட்டும் போதாது; அந்தக் குழு என்ன செய்யும்?' என்று கேட்டனர்; 'அது, உங்கள் பிரச்சினைகளை ஆராயும்; அதுமட்டுமல்ல—என். ஜி. ஓ.-க்கள் நிலைபற்றியும், நாட்டின் நடுத்தர மக்களின் நிலைபற்றியும், வரியைப் பற்றியையும் விசாரிக்கும்; அத்துடன் நிற்காது; நாட்டில் நடக்கும் ஆட்சிமுறை குறித்தும் விசாரிக்கும்' என்றார்; அதற்கும் மசியவில்லை தபால்-தந்தி ஊழியர்கள் — அதற்குப் பிறகுதான் அவசரச்சட்டத்தைத் துணைக்கு அழைக்கிறார் நேரு! இது, அவருக்கு ஒரு இழுக்கு என்று தோன்றவில்லை—தலைவருக்குப் பெருமைதரும் காரியமாகும் எனக் கருதுகிறார். குறைபடும் மக்கள் குமுறும் உள்ளத்தோடு தங்கள் குறைகளைத் தெரிவிக்கும்போது உற்சாகமூட்டுவதுதான் உண்மைத் தலைவருக்கு அழகு! உண்மையில் அக்கறை காட்டுபவர்தான் உண்மைத் தலைவர்! வேலைநிறுத்தம் நிகழாவண்ணம் தடுத்தால்தான் உண்மைத் தலைவர்! 'வீட்டுக்காரன் தூங்கட்டும்; பார்த்துக் கொள்கிறேன்' என்றால், கள்வனுக்குப் பெருமையில்லை!

"கிளர்ச்சியை ஆரம்பிக்க வேண்டுமானால் கிளர்ச்சிக்காரர்கள் முற்போக்குச் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; அதற்குக் கொஞ்சம் தியாக புத்தியும் வேண்டும்.

"கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கையை நிறைவேற்ற சர்க்கார் மறுப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு; ஒன்று—வெட்கம்; இன்னொன்று — 'இவன் சொல்லியா நாம் கேட்பது'— என்பது! இந்தச் சிக்கலை அவிழ்ப்பது எப்படி?

"சட்டசபையிலே என்னைப் பார்த்துக் கேட்கிறார்கள்—'இதற்கெல்லாம் பணம் வேண்டுமே; அதற்கு எங்கே போவது' என்று! இந்தக் கேள்வியை, போகிற போக்கிலே கேட்டுப் பயனில்லை!

"காஞ்சி கருட சேர்வை உற்சவத்தின்போது, சாமியை ஒரு புறம் பார்த்து தரிசித்துக் கொண்டே, இன்னொரு புறத்திலே பலாப்பழத்தின் விலையைக் கேட்டால் எப்படி பலாப்பழம் வாங்க முடியும்?

"எனவே, பணம் தேவையென்றால் அதற்கான வழிவகைகளைக் காணவேண்டும்; வட்டமேஜை மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும்; பொருளாதார நிபுணர்கள்—தொழிலாளர் தலைவர்கள்—பொதுமக்கள் ஆகிய மூன்று தரப்பினரையும் அழைத்து ஆலோசிக்க வேண்டும். இதைச் செய்ய ஏன் தயங்க வேண்டும்? எங்களைக்கேட்டால், நாங்கள் யார் மடியைக் காட்டப் போகிறோமோ அந்த மடியை நம்பித்தான் தேர்தலில் இருந்தார்கள் காங்கிரஸ்காரர்கள்—'அந்த மடி இல்லையேல், 'கன'மாக முடியாது' என்ற நிலி ஏற்பட்டு!

"சர்க்கரையை கரும்புச் சாற்றிலிருந்து எடுக்கிறார்கள் என்று சொன்னால் நம்ப மாட்டார்கள்; கரும்பை அரைத்து முறைப்படி எடுத்தால்தான் சர்க்கரை கிடைக்கும். வரிபோடுவதானால் தொழிலாளர் சேர்த்த உழைப்பை முதலாளி கடன் வாங்கி விடுகிறான். கரும்பை யானைக்குட்டி தின்று துப்பிய பிறகு அந்தச் சக்கையிலிருந்து சர்க்கரை எடுக்கமுடியுமா? அதைப்போல, உழைப்பாளி தன் சக்தி உறிஞ்சப்பட்டபின், வரியை எங்கிருந்து கட்டுவான்?

"பணமிருக்குமிடத்தை எங்களைக் கேட்கவேண்டியதில்லை; அவர்களே அறிந்துகொள்ளலாம். தேர்தலில் யார் அதிகப் பணம் கொடுத்தார்களோ அவர்களைக் கேளுங்கள்; அவர்களுடைய கணக்குப் புத்தகத்தைப் புரட்டிப் பாருங்கள்; அப்போது, பணமிருக்குமிடம் தெரியும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—8—57 திங்கள்

# பொதுமக்களும்—அஞ்சல் ஊழியர் அறப்போரும்

ஆகஸ்டு ஒன்பதாந் தேதி—இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் பணியாற்றிவரும் அஞ்சல்-தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். அத்தீர்மானத்தை, தீர்மான வடிவுடன் இருக்கச் செய்வதும் செயலளவில் காணச் செய்வதும் இந்தியப் பேரரசினிடம் இருக்கின்றது.

அஞ்சல்-தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தத் தீர்மானம், செயலுருவம் பெறும் பட்சத்தில் பொதுமக்களுக்குப் பலவித் இன்னல்கள் ஏற்படக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. தங்கள் வேலைநிறுத்தத்தின் காரணமாகப் பொதுமக்களுக்கு விளையக்கூடிய தொல்லைகளை, பொதுமக்கள் அறிந்திருக்கும் அளவைவிட, அஞ்சல்-தந்தி ஊழியர்கள் மிகமிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றனர் என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

அஞ்சல்-தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தம் மட்டுமல்லாது, எந்த வேலைநிறுத்தமானாலும் அது பொதுமக்களைப் பாதிக்கத்தான் செய்யும். அதுபோன்றே பொதுமக்கள் பாதிக்கப்படுவதைவிட, வேலைநிறுத்தத்தை மேற்கொண்டவர்களையும், வேலைநிறுத்தம் பலமடங்கு தாக்குவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

• குறிப்பிட்ட வேலைநிறுத்தத்தின் காரணமாக, பொதுமக்கள் பாதிக்கப்படுவது கடுகளவு என்றால், வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்ற ஊழியர்கள் அடைகின்ற பாதகம் மலையளவு ஆகும். எனவே, எந்தவித தொல்லைகளையும் அகமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் துணிவுடன் தான், வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முன்வருகின்றனர் ஊழியர்கள் என்பதை பொதுமக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அஞ்சல்-தந்தி ஊழியர்கள் வெறும் அரசாங்க ஊழியர்களாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் நமது சமூகத்தின் பொது ஊழியர்களாக இருந்துவருகின்றனர் என்ற உண்மையை நமது மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சமூக ஊழியர்களாக இருந்து பொதுமக்களுக்கு சிறப்பான பணிபுரிந்துவரும் அஞ்சல்-தந்தி ஊழியர்கள் குறைந்த பட்ச அளவாவது நல்வாழ்வைப் பெற்றுள்ளவர்களாக இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் பொதுமக்களுக்கு எப்பொழுதும் உண்டு. பொதுமக்களுக்கு இயல்பாக உள்ள அப்பொறுப்பும் கடமையும் எவ்வாறு செயல்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் மேற்படி ஊழியர்களின் செயலாற்றும் திறமும் அமைந்திருக்கமுடியும்.

நமக்கு ஊட்டமான உணவளிக்கும் பசுவிற்குக் கால் வயிறு அரை வயிறு தீனி போட்டுவிட்டு, அப்பசு, குடம் குடமாகக் கறக்கவில்லை எனச் சீறிப் பாய்வதில் பொருளே இல்லை.

அஞ்சல்-தந்தி ஊழியர்களின் சேவை மேலும் திறம்பட பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டுமானால், இந்தியப் பேரரசை எதிர்த்து அவர்கள் தொடுக்க இருக்கும் வேலை நிறுத்த அறப்போருக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்புப் பரிபூரணமாக இருந்தாக வேண்டும். அவ்வாறே முழு ஆதரவு இருக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் தேவையே இல்லை.

உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பண்டங்களின் விலை நித்தம் நித்தம் ஏறிக் கொண்டே போகிறது. அதே நேரத்தில் பொதுமக்களின் வாங்கும் சக்தி மிகமிக விரைவாகச் சரிந்துகொண்டே போகிறது. இதன் விளைவு சாதாரண மக்களின் வாழ்வு நசிவதுதான்.

இவ்விலையேற்ற வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பொதுமக்கள் தவிக்கின்றனர். இவ்விலையேற்றத் தாக்குதல் விளைவாக தம் தம் உடலில் ஏற்படும் தழும்புகளைக் காண்கிறார்கள்—அவை தரும் வலியையும் அனுபவிக்கிறார்கள்—ஆனால் இவ்விலையேற்றத் தாக்குதல் எங்கிருந்து வருகிறது; எவர் இதற்குப் பொறுப்பு; இதைத் தடுத்துநிறுத்த வழிவகை இல்லையா; என்பன போன்றவற்றைப் புரிந்துகொள்ளாது பலரும், புரிந்துகொண்டு சிலரும் காலம் கழித்துவருகின்றனர்.

விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்—அதற்கு வழிவகை இல்லையா என மக்கள் கதறிக்கொண்டிருக்கும்பொழுது வரிச் சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாத மக்கள்மீது மேலும் வரியைப் போட்டு இன்றியமையாப் பண்டங்களின் விலையை மேலும் உயர்த்தியிருக்கிறன்றது இந்தியப் பேரரசு.

இந்தியப் பேரரசின் இச்செயல் பொதுமக்களின் புண்பட்ட நெஞ்சில், கூரியகோல் கொண்டு குத்துவதாகும்.

இச்செயல், சமூக விரோதம்—மகத்தான தேசத் துரோகம்.

பண்டங்களின் வரைகடந்த விலையேற்றத்திற்கு ஆக்கம் அளித்துவரும் சமூக விரோதத்தையும், தேசத் துரோகத்தையும், வகைகாணா நிலையில், இதுவரை வேண்டா வெறுப்பாகத் தாங்கிக் கொண்டனர். அவ்வாறு இனியும் தாங்கிக்கொள்ள முடியாது என்ற முடிவுடன், அஞ்சல்-தந்தி ஊழியர்கள் பொதுமக்கள் சார்பில், வரை கடந்த விலையேற்றத்தை ஆக்கியும் ஊக்கியும் பாதுகாத்தும் வரும் தீயசக்திக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தத் திட்டமிட்டுள்ளனர். எனவே, தங்கள் சார்பில் பண்டங்களின் விலை உயர்வை மையமாக வைத்து அறப்போரில் ஈடுபடத் தீர்மானித்துள்ள அஞ்சல்-தந்தி ஊழியர்களின் வாழ்க்கைப் போராட்டத்திற்குப் பொதுமக்களின் முழு ஆதரவும் கண்டிப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொதுமக்களின் வளமும் வாட்டமும், பொதுமக்களில் ஒரு உறுப்பாக உள்ள அஞ்சல்-தந்தி ஊழியர்களையும் பாதிக்காது விடாது. அதுபோன்றே அஞ்சல்-தந்தி ஊழியர்களின் வாட்டம் களையப்பட்டு வளம் கூட்டப்படுவதிலும பொது மக்களுக்கும் பொதுவான பங்குண்டு. எனவே, அஞ்சல்-தந்தி ஊழியர்களின் அறப்போருக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு எப்பொழுதும் இருந்தே தீரும்.

# ‘இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் இல்லை’

## ‘சிலரிடத்தில் அதிகாரம் குவிந்திருப்பது ஆபத்தானது’

### ஆச்சாரியா வினோபா பாவே கருத்து

பூனா, ஆக. 1—

“நாம் ஜனநாயகம் பற்றிப் பேசுகிறோம்; ஆனால், அதிகாரமும் பொறுப்பும் இன்று உச்சியில் உள்ள ஒரு சிலரிடத்தில் குவிக்கப் பட்டிருக்கின்றன. விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்—ஐந்து அல்லது ஆறு பேர்களிடத்தில்தான் எல்லா அதிகாரங்களும், உரிமைகளும் இருக்கின்றன. எஞ்சியோரெல்லாம் வெறும் ‘ஆமாம் சாமி’களாக இருக்கின்றனர். இந்த ஐந்தாறு பேர்கள் மேற்கொள்ளும் முடிவில் ஏற்படக்கூடிய ஒரு சில தவறு, எண்ணற்ற மக்களுக்குத் துன்பத்தையும், துயரத்தையும் கொண்டுவரக்கூடியதாகும். சர்க்கார்களிடம், மக்கள் வாழ்வின் எல்லா அம்சங்களையும் கட்டுப்படுத்துகிற அதிகாரம் இருக்கிறது. தனிப்பட்டது என்று கூறக்கூடிய வாழ்வுத் துறை எதுவும் இன்று இல்லவே இல்லை என்று கூறலாம்; இது மிக ஆபத்தான நிலையாகும்.

“உண்மையான எசமானர்களான வாக்காளர்கள், சர்க்கார்கள் என்ன செய்கின்றன என்பதை அறியமுடியாதவர்களாயிருப்பதைக் காண்கிறோம். நமது ஜனநாயக அமைப்புமுறைகள், கூரிய பரிசீலனைக்கு உட்பட முடியாதனவாயிருக்கின்றன. இன்று ஜனநாயகத்தால் அதிகாரத்திற்கு வந்துள்ள சிலரது அதிகாரத்தைவிட, பழைய கால மன்னர்களிடமிருந்த அதிகாரம் குறைந்த ஆபத்தை உடையதாகத்தான் இருந்தது என்று நான் கூறினால் பலர் ஆச்சரியப்படலாம், திடுக்கிடலாம்! மன்னர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு ஒரு மாற்றுத் திட்டமாகத் தான், பெரும்பான்மையினர் ஆட்சி என்ற கொள்கை உருவாக்கப்பட்டது. எனவே இன்றைய ஜனநாயக சர்க்கார், மன்னராட்சியின் சில குறைகளையும் உடையதாயிருப்பதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை.

“இன்று சர்க்கார், சர்வ அதிகாரமும் படைத்ததாக வளர்ந்து விட்டது; தனி நபர்கள், அலட்சியத்திற்குரியவர்களாக, அதிகார மற்றவர்களாக விளங்குகிறார்கள். இது நிச்சயமாக சுயராஜ்யம் அல்ல. இன்றைய உலகில் எங்குமே உண்மையான சுதந்திரம் நிலவவில்லை”

—என்பதாக, ஆச்சாரியா வினோபா பாவே அவர்கள், ‘பூதான்’ இதழில் இந்த வாரம் எழுதியிருக்கிறார்.

## கவனக் குறைவால் 5 வயது சிறுவன் மரணம்

### மருத்துவ மனை அதிகாரிகள்மீது நடவடிக்கை

இலட்சுமணபுரி, ஆக. 3—

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 5 வயதுப் பையன் ஒருவன், டாக்டர்களின் கவனக் குறைவால் மரணமுற்றான் என்றும், இதுகுறித்து விசாரணை நடத்தியபின் சர்க்கார், பாஸ்தி மாவட்ட மருத்துவ மனையின் சிவில் சர்ஜன் ஒருவரை ஊரை விட்டு மாற்றியும், மற்றும் மூன்று டாக்டர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

## சென்னை உயர் நீதிமன்றம்

### மேலும் இரு நீதிபதிகள் நியமனம்

### டெல்லி அனுமதிக்கிறது

புதுடில்லி, ஆக. 2—

சென்னை உயர்நீதி மன்றத்தில் மேலும் இரு தற்காலிக நீதிபதிகளை நியமித்துக் கொள்ள டில்லி சர்க்கார் அனுமதித்திருக்கிறது என்றும், அந்த நியமனம் பற்றி பரிசிலனை நடைபெறுவதாகவும் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி தெரிவித்திருக்கிறார்.

# வரி போடும் படலம் முடிந்தது-கடன் தேடும் படலம் ஆரம்பம்!

புதுடில்லி, ஆக. 3—

மாநிலங்கள் வெளியிட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 238 கோடி பற்றாக் குறை ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறையை சரிக்கட்ட மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையே ஒரு புதிய உடன்பாடு ஏற்பட்டுள்ளதாம். இதன்படி, தேசிய சேமிப்பு நற்சான்றுகள் வழங்குவதின் மூலம் கிடைக்கும் தொகையில் மத்திய அரசு 66.66 சதவிகிதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்து தருமாம்!

முன்பு, ‘மாநிலங்கள் கடன் எழுப்பக்கூடாது’ என்று மத்திய அரசு அறிவித்ததற்கு ஒரு புதிய விளக்கம் தந்துள்ளார் மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே.!

‘பகிரங்கமாக மார்க்கெட்டில் கடன் எழுப்புவதைவிட, சிறு சேமிப்புகள் மூலம் கடன் திரட்டலாம்’ என்று ரிசர்வ் பாங்கி கூறியது வெறும் யோசனைதானும்!

‘மாநிலங்கள் விரும்பினால் கடன் எழுப்பலாம்’ என்று இப்போது நிதி அமைச்சர் டி. டி. கே. மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

## ஒரிசாவில் உபரி அரிசி

### டெல்லி கொள்முதல் செய்து கல்கத்தாவிற்கு அனுப்புகிறது!

புதுடில்லி, ஆக. 2—

ஒரிசாவில் கிடைக்கக் கூடிய உபரி அரிசியை, டெல்லி சர்க்கார் கொள்முதல் செய்து, அண்டையில் உள்ள பற்றாக் குறைப் பிரதேசங்களுக்கு அனுப்பும் வேலையை கடந்த சிலவாரங்களாகச் செய்து வருகிறார்களாம்.

இதுவரை ஒரிசாவில் உள்ள அரிசி மில்காரர்களும், வியாபாரிகளும் 35,000 டன் அரிசிவரை தருவதற்குச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் என்றும், மேலும் அதிகமான அளவு கிடைக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

ஒரிசா அரிசி, வடக்கே கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறதாம்.

## உண்மையாகவா?

மாநில அரசாங்கம் நடத்தி வரும் சில சிறு தொழில்களை மூன்றாண்டு காலத்திற்குப் பிறகு கூட்டுறவு முறையில் நடத்தத் தொழிலாளரிடம் ஒப்படைக்கப் படும் என்று தெரியவருகிறது.

மதுரையில், நெசவு ஆலைக்கான இயந்திர உறுப்புகளைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாம்; இதற்கு ரூ. 2 இலட்சம் செலவிடப்படுமாம்.

# ‘மூலதனச்செலவால்பணப் புழக்கம் அதிகரித்திருக்கிறது’

## ‘இதுவும் உணவுப் பொருள் விலை ஏற்றத்திற்குக் காரணம்’

### சென்னையில் பொருளாதாரப் பேராசிரியர் விளக்கம்

மீனம்பாக்கம், ஜுலை 31—

“இரண்டாம் திட்டம் பேராசையான திட்டமல்ல’ என்று இங்கு கூறிய பேராசிரியர் மஹலனோபிஸ், ‘சந்தேகமில்லாமல் (திட்டத்தினால்) கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்கின்றன’ என்றும் ஒப்பியிருக்கிறார். ஆனால் அந்தக் கஷ்டங்கள், குறுகிய காலத்தில் சமாளிக்கக் கூடியவை தான் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

“நாட்டின் பொருளாதார நிலையில் கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், நாம் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், நமக்குரிய பங்கினைவிட அதிகமாக அன்னியச் செலாவணியைச் செலவிட்டுவிட்டதுதான்” என்றும் அவர் விளக்கி யிருக்கிறார்.

“உணவுப் பொருள் விலை ஏற்றத்திற்குக் காரணம் பல இருக்கலாம். நாம் மூலதனச் செலவு ஏராளமாகச் செய்வதால், நாட்டில் பணப் புழக்கம் அதிகரித்திருக்கிறது. இதுவும் விலை ஏற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம். உணவுப் பொருளை பதுக்குவதும், இதற்குக் காரணமாகும்” என்றும் கூறியிருக்கிறார்.

# 'நாடறிந்த மேதைகள் நம் கருத்துக்கு ஆதரவு நல்குகின்றனர்'

## 'நாடு சிறிதானால் வாழ முடியாது என்போர் அறிவுப்பஞ்சத்திற்கு ஆளானோர்தாம்'

### சென்னை-புரசை அறிவு வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவில் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. கருத்துரை

கடந்த 31—7—57 அன்று புரசையில் அறிவு வளர்ச்சி மன்ற ஆண்டு விழாவில் கலந்துகொண்டு தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அறிவு — நிலைபெற்றதல்ல; வளரும் தன்மையுடையது; அதிலும் அறிவு வளர்ச்சி சுயநலத்திற்குப் பயன்படக்கூடாது; தனி மனிதனின் நன்மைக்கும், தனிக் குடும்பத்திற்கும், தனிச் சாதிக்கும் பயன்படக்கூடாது; அவ்வாறு பயன்படுத்தப்படுமானால் அந்த அறிவு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டதாகாது; அது சுயநலம் நிறைந்தவர்கள் கையாளும் முறை. ஆனால் அறிவு பொதுநல நோக்குடன், சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவருடைய முன்னேற்றத்திற்கும், நாட்டின் நலனுக்கும் பயன்படுத்தப்படவேண்டும்.

"சமுதாயத்துறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி, அரசியலில் உள்ள அநீதிகளை அகற்றி, பொருளாதாரத் துறையில் சமத்துவத்தை உண்டாக்க வேண்டும்; 'நல்ல சமுதாயம் உருவாகவேண்டும்; நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும்' என்ற உயரிய நோக்கம் இருக்க வேண்டும். அறிவு வளர்ச்சி என்பது அந்த அடிப்படையில பயன்படுத்தப்படவேண்டும்.

"அறிவுதான், 'நாம் யார்' என்று சிந்திக்கச் செய்கிறது. அந்த உணர்ச்சி செயல்படும்போது நமக்கென்று திட்டங்கள், கொள்கைகள், எண்ணங்கள், உருவாகின்றன. அப்படி நாம் சிந்தித்ததின் காரணமாகத்தான் நாம் திராவிடர் என்றும், இன்று நாம் அடிமைப்பட்டுள்ளோம் என்றும் உணரத் துவங்குகிறோம். அதன் உருவம்தான் நாட்டின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம். நீங்களும் அறிவின் துணைகொண்டு சிந்திப்பீர்களானால் நிச்சயம், திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆதரிப்பீர்கள் என்று நான் கூறவிரும்புகிறேன்.

"இன்று திராவிட முன்னேற்றக் கழகம் நாடெங்கும் நல்ல முறையில் பணியாற்றிவருகிறது. மக்களிடையே அறிவு மழுங்காமலும், மறையாமலும் இருக்க இத்தகைய மன்றங்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"அறிவு வளர்ச்சியின் காரணமாகத்தான் இன்று நாகர்கள் விடுதலை கோருவதுமாகும். உலக வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும்போது, எத்தனையோ நாடுகள் விடுதலை அடைந்துள்ளது தெரிய வரும். அவர்கள் எல்லோரும் அறிவை சுதந்திரமாகப் பயன்படுத்தி செயலாற்றியதன் விளைவே, இன்றும் பல நாடுகள் விடுதலைப் போராட்டம் நடத்தி வருவதாகும்.

"அண்மையில் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் அடிமைப் பட்டுக் கிடந்த டுனீஷியா, சுதந்திரம் பெற்றது.

"மக்களைக் கூலிகளாக மிருகங்களாக வெள்ளையர்கள் மதித்துக் கொடுமைப்படுத்திய 'கோல்ட் கோஸ்ட்' மக்கள் இன்று சுதந்திரம் பெற்று, நாட்டின் பெயரை 'கனா' என்று மாற்றிக்கொண்டு புதுவாழ்வு வாழ முனைந்துள்ளனர்.

"அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டின் மக்கள், தாங்கள் கொடுமைப் படுத்தப்பட்டதை உணர்ந்ததற்கும், அந்நியர் ஆதிக்கத்தை விரட்ட முயன்றதற்கும் என்னகாரணம்என்று கருதுகிறீர்கள்? இன்று அல்ஜீரியாமக்கள் விடுதலைப் போராட்டம் நடத்துவதற்குக் காரணம் என்னவென்று எண்ணுகிறீர்கள்? இதனிடையேதான், வரும் ஆகஸ்டுமுதல் தேதியன்று மலேயா சுதந்திரம் பெறுகிறது என்ற செய்தியையும் பார்க்கிறோம்.

"இதெல்லாம் எதைக் காட்டுகிறது? மனிதன் சிந்திக்கத் துவங்கினால், அறிவைத் துணையாகக்கொண்டு எண்ணிப்பார்க்க முற்பட்டால், 'நாம் யார்—நம் வரலாறு என்ன என்பதை நிச்சயம் உணர்கிறான். அதன் பயனாக அவனுக்கென்று ஓர் இலட்சியத்தையும் அதற்கான கொள்கையையும், திட்டத்தையும் உருவாக்கிக் கொள்கிறான். அத்தகைய அறிவு வளர்ச்சியை யாரும் தடை செய்துவிட முடியாது.

"நாகர் கிளர்ச்சியைப் பாருங்கள்; அவர்களுடைய கிளர்ச்சியை ஒடுக்க டில்லி அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. என்ன ஆயிற்று? இந்திய சர்க்கார் தங்கள் இராணுவத்தைப் பயன்படுத்தினார்கள்; அது போதாதென்று சென்னை மலபார் போலீஸ் படையையும் அழைத்தார்கள். கிளர்ச்சி நின்றதா? அவர்களை ஒடுக்க முடிந்ததா? விடுதலைப் போராட்டம் ஓய்ந்ததா? நாகர் தலைவர் தலைக்கு ரூ. 10,000 பரிசுகூடத் தருவதாக விளம்பரப் படுத்தினார்கள்—இந்திய அரசாங்கம் வெற்றி பெற்றதா? இன்று நாகர் தலைவர்களுடன் டில்லி சமரசம் பேச இசைந்துள்ளது.

"நாமும் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்; நமது இலட்சியமும் நாட்டின் விடுதலைதான்; நாம் கேட்பதும் இன்பத் திராவிடம் தனியே பிரியவேண்டும் என்பதுதான். ஆனால், நாம் ஒருவிதத்தில் மாறுபட்டவர்கள்; நாம் கையாளும் முறை வேறு; நாம், 'ஆண்ட இனம், இன்று டில்லிக்கு அடிமையாக இருப்பதேன்?' என்று எண்ணிப் பார்க்கிறோம். 'நம் நாடு நம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்' என்றுதான் விரும்புகிறோம்; அதற்கு, மற்றவர்கள் சென்ற பாதையையே நாமும் பின்பற்றி, பலாத்காரத்தைத் தூண்டிவிட நாம் எண்ணவில்லை. நல்ல சனநாயக முறையில் நம்பிக்கை இருக்கிறது நமக்கு; எனவே, நாட்டுப் பிரிவினையை அமைதியாக, மக்களிடையே அதற்கான நியாயத்தை விளக்கி—உண்மையை உணர்த்தி நாட்டு விடுதலையைப் பெற விரும்புகிறோம். ஆளும் கட்சியினர் ஏற்றாலும், ஏற்காவிட்டாலும், நாம் இதுவரை வெளியே கூறிவந்ததையே இன்று சட்டசபையிலும் கூறிவருகிறோம். நாட்டில் பல ஆண்டுகளாக சொல்லி வந்த கருத்துக்களை இப்போது சட்டமன்றத்திலே எடுத்துக்கூறி வாதாடுகிறோம்; நியாயத்தைக் கோருகிறோம் — ஆளும் கட்சியினர் சிந்திப்பார்கள் என்று இன்னும் நாம் கருதுவதால்!

"பல ஆண்டுகளாக நாம் கூறிய கருத்துக்கள், எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் வாதாடிய சிக்கல்கள் அத்தனைக்கும் இன்று, நம்மை எதிர்த்த சிலர்—வெறுத்த சிலர்—தவறாகப் பேசிவந்த சிலர் உள்பட பல அறிவாளிகள்—நாடறிந்த மேதைகள்—ஆதரவு தெரிவித்துள்ளனர்.

"நாம் கூறிய கருத்தை இன்று பலபேர் கூறுகிறார்கள். முன்பு இந்தியாவின் வைசிராய் பதவியில் இருந்த ஆச்சாரியார்கூட 'அதிகாரம் டில்லியிடம் உள்ளது; மாநிலங்கள் வெறும் மாவட்ட ஆட்சி மன்றங்களைப் போலவே நடத்தப்படுகின்றன' என்று கூறியுள்ளார். இதைத்தான் நாம் பல ஆண்டுகளாகச் சொல்லிவருகிறோம். அது மட்டுமல்ல; நாளடைவில் மாநிலங்களிடம் உள்ள எஞ்சிய அதிகாரங்களையும் டில்லி தன் வசப்படுத்திக்கொள்ள முனைந்துள்ளது என்றே அஞ்சவேண்டியுள்ளது.

"இதுவரை விற்பனை வரியை மாநில அரசாங்கம் வசூலித்து வந்தது; அதையும் டில்லியிடம் ஒப்படைக்கவேண்டிய நிலை சமீபத்தில் ஏற்பட்டது. சாதாரணமாக வரிபோடும் அதிகாரத்தைக்கூட மாநிலங்களிடமிருந்து டில்லி எடுத்துக்கொள்கிறது. நிலைமை இப்படி இருக்கும்போது, 'டில்லியிடம் அதிகாரம் இல்லை; எங்கள் கைகள் கட்டப்பட்டு இல்லை' என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறுவதில் பொருள் விளங்கவில்லை. இது மட்டுமல்ல; 'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது' என்று நாம் அப்போதே சொன்னோம்; புள்ளி விவரங்களைச் சுட்டிக் காட்டி, வடநாட்டில் உள்ள தொழில் திட்டங்களை ஆராய்ந்து ஏற்றத்தாழ்வுகளை அன்று நாம் கூறினோம்; இன்று என்ன பார்க்கிறோம்?

"இரண்டாவது திட்டத்தில் மக்கள் தொகை அடிப்படையில், இந்தியாவில் 40 கோடி மக்கள் இருக்கின்றனர் என்றால், தென்னாட்டிலுள்ள சுமார் 10 கோடி மக்களுக்கு ரூ. 1,200 கோடி கிடைத்திருக்க வேண்டும். தனித் தமிழ் மாநிலத்தின் மக்கள் தொகை சுமார் 3 கோடி; இந்த அடிப்படையில் தமிழகத்திற்கு ரூ. 360 கோடி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் நமது நிதி அமைச்சர் பயந்து பயந்து ரூ. 400 கோடி கேட்டார், அதை டில்லி கொடுத்ததா? ரூ. 200 கோடிதான் இரண்டாவது திட்டத்தில் சென்னைக்கு டில்லி தந்தது; அதுவும் இப்போது ரூ. 148 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, 'நாம் எவ்வளவு வஞ்சிக்கப்பட்டுள்ளோம் என்பதை, கட்சிபேதமில்லாமல் எண்ணிப் பாருங்கள்.

"நமது மாநிலம் பின்தங்கிய மாநிலம் என்பதை டில்லியின் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அதைச் சுட்டிக் காட்டி, 'அதிகத் தொகை ஒதுக்க வேண்டும்' என்று திட்டக் குழுவிடம் கேட்டோம்—அவர்களும் ஒப்புக் கொண்டார்கள்; ஆனால், ஒப்புக் கொண்டபடி தரவில்லை; 'ஏன்' என்று கேட்டால், 'இங்கு திட்டங்கள் போட வழியில்லை' என்கின்றனர்.

"நீங்களே சிந்தித்துப் பாருங்கள். சேலத்தில் இரும்பு இருக்கிறது—பாக்சைட் இருக்கிறது—மாக்னசைட் இருக்கிறது; இருந்தும், திட்டம் தீட்ட முடிய முடியவில்லையாம்!

"நெய்வேலி நெய்வேலி என்று பேசுகிறார்கள்; இங்கு தார் தயாரிக்க, மின்சாரம் உற்பத்தி செய்ய, உரத் தொழிற்சாலை நிறுவ—எல்லாவற்றிக்கும் சேர்த்து ரூ. 68 கோடிதான் ஒதுக்கியுள்ளனர்; இந்தத் திட்டம் பலன்தர இன்னும் 10 ஆண்டுகள் ஆகும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் தீருமா? கனரகத் தொழில்கள் வேண்டாமா? சிறு தொழில்கள் பெருக வேண்டாமா? இதனால்தான், 'டில்லி, சென்னைக்கு நியாயம் வழங்கவில்லை' என்று, கூறுகிறோம். நாம் கூறிவந்த இந்தக் கருத்தைத் தழுவி இன்று பலர் கூறுகிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் உள்ள மாறுபாடு, நாம் நோய் இருப்பதைக் கண்டுபிடிப்பதோடு நிற்காமல் மருந்தையும் கூறுகிறோம்; அவர்களும் சொல்லுகிறார்கள்—ஆனால், பரிகாரம் கூறுவதற்கு இப்போது அஞ்சுகிறார்கள்.

"நாம் வெளிப்படையாக, 'டில்லியின் தொடர்பு அறுபடவேண்டும்; தனித் திராவிடம் மலரவேண்டும்' என்று கூறுகிறோம்.

"நாடு சிறிதானால் உலகம் மதிக்காது; உதவி கிடைக்காது—என்று சிலர் கூறுகிறார்கள். இந்தியாவில் 40 கோடி மக்களை அடகுவைத்து பண்டிதர் வெளிநாடுகளில் கடன் எழுப்பமுடிகிறது என்றால், நம்மால் ஏன் முடியாது? இன்று சிறு சிறு நாடுகள் வாழவில்லையா? எனவே, இது விதண்டாவாதமாகும். சுவீடன் போன்ற சிறு நாடுகள் எல்லாம் நல்ல பாதுகாப்புடன் தனித்து வாழ முடிகிறபோதும், கனா, போன்ற நாடுகள் சுதந்திரமாக வாழ முடியும் என்கிறபோதும், தனித் திராவிடம் வாழமுடியாது என்று எவரும் நினைக்கவேண்டாம்; அப்படி நினைப்பதும் 'அறிவுப் பஞ்சம்' என்றே நான் கூறுவேன்.

"நாம் கூறியதை இன்று பலர் ஆதரிக்க முன்வந்துள்ளனர்; மக்கள் நம் பக்கம் திரும்புகின்றனர். நாடு நிச்சயம் பிரியும் என்பதற்கு போதிய நல்ல அறிகுறிகள் காணப்படுகின்றன."

# 'மச்சாவதாரமும் வராகவதாரமும் மறைந்தது ஏன்?'

## பரமக்குடியில் பொதுச்செயலாளர் விளக்கம்

பரமக்குடி, ஆக. 2—

இந்நகர் கலை முரசு நாடக மன்றத் துவக்க விழா ஜூலை 17-ல், தோழர் முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து 'கலையும் கழகமும்' என்பதுபற்றிப் பேசினர்.

மன்றத்தைத் துவக்கிவைத்து பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உலகம் நாகரிகத்தை உணராத காலத்திலேயே கூத்தை நடத்திக்காட்டிய பெருமை தமிழகத்தையே சாரும். நாடகத்தைச் சிலர் இழிவாகக் கருதுகிறார்கள்; நடிகர்களைக் 'கூத்தாடி'கள் என்று இகழ்ச்சியாகப் பேசுகிறார்கள்.

"கூத்து ஒன்றுதான், கற்றவர்களையும் மற்றவர்களையும் திருத்தக்கூடிய சக்தியைப் பெற்றது. உதாரணமாக, ஆண்டவன் பத்து அவதாரமெடுத்ததாகச் சொல்கிறார்கள்; அதில் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும்தான் மக்கள் மனதில் நிற்கின்றன; மற்றவை மறந்துபோயின; காரணம், மச்சாவதாரம், வராகவதாரம் போன்ற காட்சிகளை நாடகத்தில் காட்ட முடியவில்லை. எனவே, பாமரர்களையும் திருத்தக்கூடிய சக்தி கூத்துக்கு உண்டு. அந்தக் கூத்தை, காலத்தோடு சேர்த்து வளர்க்க வேண்டும்."

# மாநில அரசுகளுக்கு டில்லியின் தாக்கீது!

டில்லி, ஆக. 3—

பத்திரிகையாளர் ஊதிய நிறுவனம் அளித்த தீர்ப்புகளை நாட்டின் எல்லாப் பத்திரிகைகளும் அமுல் நடத்தவேண்டியதுதான் கடமையாகும் என்றும், மாநில அரசுகள் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் மத்திய அரசாங்கம் தாக்கீது அனுப்பியுள்ளது.

ஊதிய நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ள 'எக்ஸ்பிரஸ்' இன ஏடுகளுக்கு மட்டும் முடிவு தெரியும்வரை அமுல் நடத்தவேண்டிய அவசியமில்லையாம்.

# தமிழ்நாட்டில் தினைப் பொருள் சாகுபடி

### ஒரு புள்ளி விவரம்

சென்னை, ஆக. 2—

தமிழ்நாட்டில் 1956—57-ல் 70,500 ஏக்கரில் தினை பயிராயிற்று. முந்திய ஆண்டு சாகுபடி 64,100 ஏக்கர்; முந்திய ஐந்து ஆண்டு சராசரி சாகுபடி 84,700 ஏக்கர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தினை பயிராகவில்லை. வட ஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் முந்திய ஆண்டு அளவிலும், இதர மாவட்டங்களில் அதிகமாகவும் பயிராயிற்று.

தினை மொத்த விளைச்சல் 18,200 டன்; முந்திய ஆண்டில் 15,700 டன்; முந்திய ஐந்து ஆண்டுகளின் சராசரி விளைச்சல் 18,700 டன்.

### கேழ்வரகு சாகுபடி

1956-57-ம் ஆண்டில் 7 இலட்சம் ஏக்கரில் வரகு சாகுபடியாயிற்று; முந்திய ஆண்டில் 6,82,800 ஏக்கர்; முந்திய ஐந்து ஆண்டு சராசரி சாகுபடி 7,55,200 ஏக்கர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வரகு பயிராகவில்லை. நீலகிரியில் மிகக் குறைவு. இராமநாதபுரத்தில் முந்திய ஆண்டு அளவிலும், திருச்சிராப்பள்ளியில் குறைவாகவும் இதர மாவட்டங்களில் அதிகமாகவும் பயிராயிற்று.

மொத்த விளைச்சல் 1,73,800 டன்; முந்திய ஆண்டு விளைச்சல் 1,65,700 டன்; முந்திய ஐந்து ஆண்டு சராசரி விளைச்சல் 1,75,700 டன்.

### சாமை சாகுபடி

1956-57-ம் ஆண்டில் 5,08,900 ஏக்கரில் சாமை பயிராயிற்று. முந்திய ஆண்டு சாகுபடி 5,08,600 ஏக்கர். முந்திய ஐந்தாண்டு சராசரி சாகுபடி 5,08,800 ஏக்கர்.

நீலகிரியில் முந்திய ஆண்டு அளவிலும், செங்கற்பட்டு, தென் ஆற்காடு, கோவை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகமாகவும், இதர மாவட்டங்களில் குறைவாகவும் சாமை பயிராயிற்று.

மொத்த விளைச்சல் 52,000 டன்; முந்திய ஆண்டு விளைச்சல் 50,800 டன்; முந்திய ஐந்து ஆண்டு சராசரி விளைச்சல் 48,500 டன்.

# ரூ. 11 இலட்சம் செலவில் புதிய பஸ்களாம்!

சென்னை, ஆக. 3—

நடப்பு நிதி ஆண்டில் புதிய பஸ்கள் வாங்க சென்னை அரசாங்கம் ரூ. 11 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ் போக்குவரத்தை சென்னை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பிறகு 27 புது பஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளனவாம்.

சென்னையில் தற்போது 450 பஸ்கள் உள்ளனவென்றும், இவற்றில் நாள்தோறும் சராசரி 340 பஸ்கள் ஓடுகின்றனவென்றும், செப்டம்பர் இறுதிக்குள் மேலும் 30 புது பஸ்கள் இணைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# தமிழ்நாடு என். ஜி. ஓ.-க்கள் துரோகமிழைக்கமாட்டார்கள்

## 'மத்திய சர்க்கார் ஊழியர்கள் போராட்டம் எங்கள் போராட்டமே'

### 'உத்தேச சம்பளக் கமிஷன் எங்களையும் கவனிக்கவேண்டும்'

சென்னை, ஆக. 4—

அறிவிக்கப்பட்டுள்ள மத்திய சம்பளக் கமிஷன், மாநில என். ஜி. ஓ.-க்களின் சம்பள நிலைகளையும் ஆராயும்வண்ணம், குழுவின் அதிகாரங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென, தீர்மானம் மூலமாக சென்னை சர்க்கார் ஊழியர் சங்கத்தவர் டெல்லி சர்க்காரைக் கேட்டிருக்கின்றனர்.

தமிழ்நாடு சர்க்கார் ஊழியர் சங்கத்தவர், மேலும் ஒரு தீர்மானத்தின் மூலம், 'மாநில சர்க்கார் இது விஷயத்தில் மத்திய சர்க்காரிடம் முயற்சிக்க வேண்டும்' என்றும், 'இல்லாவிடில், மத்திய சர்க்கார் நியமித்திருப்பதுபோல தாங்களும் ஒரு சம்பளக் கமிஷன் நியமிப்பதிலிருந்து தப்ப முடியாது' என்றும் எடுத்துரைத்திருக்கின்றனர்.

தபால்-தந்தி, மற்றும் இதர மத்திய சர்க்கார் இலாகா ஊழியர்களின் கோரிக்கைகளே தங்களுடைய கோரிக்கைகளும் என்பதால், தாங்கள் அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு நல்குவதாயும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

"மாநில சர்க்கார் ஊழியர்களை தபால் அலுவலகங்களுக்கு வேலைக்கு அனுப்பி, அவர்களை ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளாக்க வேண்டாம் என்று மாநில சர்க்கார்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

"மாநில என்.ஜி.ஓ.-க்கள், அதுபோல மத்திய சர்க்கார் அலுவலக வேலைகளுக்குச் செல்லுமாறு அதிகாரிகளால் பணிக்கப்பட்டாலுங்கூட, அப்படி வேலைக்குச் செல்லவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படி உத்தரவை மீறுவதினால் ஏற்படக்கூடிய ஒழுங்கு நடவடிக்கை போன்ற விளைவுகளுக்கு, இந்த மத்தியக் குழு பொறுப்பேற்றுக்கொள்ளும்" என்றும் தீர்மானம்நிறைவேற்றியிருக்கின்றனர்.

★

## விசாரணைக் கமிஷன்

### நீதிபதி ஜெகன்னாத தாஸ் தலைமையில் நியமனம்

தலைமை உயர் நீதிமன்ற நீதிபதியான பி. ஜெகன்னாத தாஸ் தலைமையில், மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிலைகள், ஊதியம் முதலியவை பற்றி ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் நிதி மந்திரி டி. டி. கே. நேற்று முன்தினம் அறிவித்தார்.

வசதிகள், சலுகைகள் என்ற வகையில், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எந்த அளவு சர்க்கார் உதவ முடியும் என்பதை கமிஷன் கண்டறிந்து கூறுமாம்.

★

## கருப்புச் சட்டம்

### டெல்லியின் விசித்திரப் போக்கு!

ஏற்கனவே தெரிவிக்கப்பட்டபடி, மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை முறியடிப்பதற்காக டெல்லி சர்க்கார், அவசர அவசரமாக சட்டம் ஒன்று கொண்டுவந்துள்ளனர்.

எதிர்க் கட்சியினரின் கடும் எதிர்ப்பையும், 'வெட்கம், வெட்கம்' என்ற குரலையும் பொருட்படுத்தாமல், மக்கள் சபையில் காங்கிரசார் இந்த மசோதாவைத் திணித்திருக்கின்றனர்.

திங்கள், செவ்வாய் இரு நாட்களும் இந்த மசோதா குறித்த விவாதம் நடக்குமாம்.

இந்த மசோதா, வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமாக்கி, அதில் ஈடுபடுபவர்களைத் தண்டிக்கிற கொடிய அதிகாரத்தை டெல்லி சர்க்காருக்குத்தருகிறது.

அதுமட்டுமல்ல; வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தருபவர்களையும் இந்தச் சட்டத்தின்மூலம் தண்டிக்க முடியுமாம்!

### எதிர்க்கட்சி வெளிநடப்பு

இந்த மசோதா வந்துதான் தீரவேண்டும் என்று, கடந்த சனியன்று காலை நேருபண்டிதர் பிடிவாதம் காட்டியதால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

## அண்ணா பேருரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இந்தியா சிமெண்டு கம்பெனியும், டாட்டா கம்பெனியும் காங்கிரஸ் கட்சித் தேர்தல் செலவுக்குப் பணம் கொடுத்த சேதி பத்திரிகைகளில் நாற்றமடிக்கின்றது. இப்படிப் பிழைப்பதுதான் காங்கிரஸ் கட்சி! இந்தமாதிரி எங்களுக்கு யாராவது பணம் கொடுத்ததாகக் காட்டமுடியுமா? கொடுத்திருந்தால், நாங்கள் ஏன் தேர்தலில் இவ்வளவுபேர் தோற்றிருக்க முடியும்?

"தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் செலவு செய்ததைப்பற்றி நாங்கள்கூடக் கூறவில்லை; மந்திரி சுப்பிரமணியமே சட்டசபையில கூறியிருக்கிறார் — 'சட்டசபைத் தேர்தலில் ஒருவர் ரூ. 9,000-க்கு மேல் செலவழிக்கக்கூடாது என்பது விதி; இந்த விதியை நான் அப்பொழுது ஆதரித்தேன்; ஆனால், இது நடைமுறையில் முடியாது என்பதை பிறகு அறிந்தேன்; 'இந்த விதிப்படி நடந்தவர்கள் காங்கிரஸ்காரர்களில் எத்தனைப் பேர்?' என்று விநோபா பாவே என்னைக் கேட்டார்; '100-க்கு 95 பேர் இதன்படி நடக்கவில்லை' என்று நான் கூறினேன்— என்றார் அமைச்சர்.

"கல்லின் மீது செதுக்கிவைத்தாலும் அது நாளடைவில் அழிய நேரிடும்; ஆனால் சட்டசபைப் பேச்சு அப்படியல்ல; நீங்கள் இன்று வேண்டுமானாலும் சட்டசபை 'ரிக்கார்டு'களைப பார்த்தால் அமைச்சரின் பேச்சைப் படிக்கலாம். அமைச்சர் இவ்வாறு கூறியவுடன், 'நீங்கள் எவ்வளவு செலவழித்தீர்கள்' என்று கேட்கலாமா? என்று எனக்குத் தோன்றியது; அப்படிக் கேட்பது அரசியல் நாகரீகமல்ல எனக் கருதி கேட்கவில்லை; இவர், அந்த 95-ல் ஒருவராகத்தான் இருக்க முடியுமென நானே கருதிக் கொண்டேன்!

"தேர்தல் செலவுக்காக இவர்களுக்குப் பணம் தருவோருக்கும் இவர்களுக்கும் எழுதாத ஒப்பந்தம் ஒன்று இருக்கிறது; 'ஏழைகளைக் கசக்கிப் பிழிவேன்; அதற்காக இலஞ்சம் போல கொஞ்சம் வருமான வரியாகக் கட்டுவேன்; 5 வருடத்துக்கு ஒருமுறை கொஞ்சம் நன்கொடை தருவேன்' என்பதுதான் பண முதலாளிகள் இவர்களுடன் செய்துகொள்ளும் எழுதாத ஒப்பந்தம்.

"நியாயமான முறையில் வாதாடிய பின்பே தபால்-தந்தி ஊழியர் கிளர்ச்சி செய்ய முடிவு செய்தனர். இந்த நாட்டில் அரசியல் கட்சிகளின் தொடர்பே இல்லாத சங்கம் தபால்-தந்தி ஊழியர் சங்கம் ஒன்றுதான்! அவர்களையே ஆளவந்தார் இந்த வாட்டு வாட்டிறுல் அரசியல் கட்சிகளால் தூண்டிவிடப்படும் ஊழியர்களை என்ன பாடுபடுத்துவார்கள்?"

### மாயூரம்-கூறைநாடு வேலாயுத மன்ற செயற்குழு உறுப்பினர்கட்கு

7—8—57 இரவு 8-மணிக்கு, மேற்படி மன்ற செயற்குழுக் கூட்டம் மன்றக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

## கழகக் கூட்டங்கள்

★

**திம்மராசன்பேட்டை:**
7—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: தி. மு. தணிகாசலம்
பேசுவோர்:
**அண்ணா**
காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

**கீழ்க்குளம்:**
செல்லையா திடலில்
5—8—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஏ. எம். ஏ. காதர்
பேசுவோர்:
கி. மனோகரன்
பி. எம். கண்ணு

## திருவண்ணாமலை தொகுதி பொதுநல மாநாடு

### கலந்துகொள்ள முதலமைச்சர் காமராசர் சம்மதம்

சென்னை, ஆக. 5—

திருவண்ணாமலைத் தொகுதி பொதுநல மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளவேண்டுமென, தொகுதி எம். எல். ஏ. ஆன தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், மாநில முதல்வர் காமராசர் அவர்களை அவர் இல்லத்தில் இன்று காலை சந்தித்துக் கேட்டபோது, காமராசர், மாநாட்டில் கலந்துகொள்ள சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

"மாநாடு, திருவண்ணாமலையில், வரும் ஆகஸ்டு 22, 23-ந் தேதிகளில் நடைபெறும்"

என்று, தோழர் ப. உ. சண்முகம் தெரிவித்தார்.

## சென்னை 5-வது வட்டம் மஜீத் மன்றத் துவக்கவிழா

### இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்வார்.

6—8—57 மாலை 6-மணிக்கு, சென்னை—வண்ணை லாலா குண்டா அமீதியா திடலில் (பிரகாச விடுதி பின்புறம்) மேற்படி மன்றத் துவக்கவிழா நடைபெறும். தோழர் கே.எஸ். அப்துல் ரகீம் தலைமை வகிப்பார்; தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மன்றத்தைத் துவக்கிவைப்பார்; துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், ஆர். எஸ். பாண்டியன், ஆகியோர் பேசுவர். டேப்-இராதா மாணிக்கம் இன்னிசை வழங்குவார்; சேலம் தேர்தல் வழக்கு நிதி வழங்கப்படும்.

## காங்கிரஸ் ஆட்சியில் பேச்சு சுதந்திரம்!

இன்று காலை 10 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் சென்னை தபால்—தந்தி ஊழியர் (நான்காம் வகுப்பு) சங்கத்தின் சார்பில் ஓர் சிறப்புக் கூட்டம் நடத்தவும், தோழர் க. அன்பழகன், தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் கண்ணதாசன் மற்றும் பலர் பேசவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; பொதுமக்களுக்கும் சுவரொட்டியின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. காலை 8 மணி முதல் ஏராளமான பொதுமக்கள் மண்டபத்தின் வாயிலில் கூடியிருந்தனர்.

கூட்டம் நடத்துவதற்குப் போலீஸ் அனுமதி கிடைக்காததால் வந்திருந்தவர்கள் வீடு திரும்ப வேண்டியதாயிற்று என்பதை சங்கத்தினர் வேதனையுடன் அறிவிக்க, பொதுமக்கள் 'காங்கிரஸ் ஆட்சியில் பேச்சு சுதந்திரம் படும் பாடு' பற்றிப் பேசிக் கொண்டே திரும்பினர்.


நேரில் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக அமைந்த மாபெரும் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஓரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

# இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஆகஸ்டில் முடிவடைகின்றன.

**புதிய வகுப்புகள்**

**ஆகஸ்ட் 9-ந்தேதி ஆரம்பமாகின்றன.**

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

**கடைசி தேதி: 8-8-57**

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாக கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

எல்லா நேரங்களிலும் கல்வி நிலையம் திறந்திருக்கும்

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

**முக்கிய அறிவிப்பு:** 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.


திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.